# சுவா சூ காங் தொடக்கப்பள்ளி
## தொடக்கநிலை 3
## சொல்வதெழுதுதல் – தவணை 3, 2026

**பெயர் : ____________________ வகுப்பு : ____________**

### சொல்வதெழுதுதல் 2 T3W2

செல்வி பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தாள். அவள் வழியில் ஒரு பணப்பையைக் கண்டாள். அவள் பணப்பையில் நிறையப் பணம் இருப்பதைப் பார்த்தாள். அவள் பணப்பையைக் காவலரிடம் கொடுத்தாள்.

### சொல்வதெழுதுதல் 2 T3W3

அன்று சனிக்கிழமை. சிவா நூலகத்துக்குச் சென்றான். நூலகத்தில் நிறையக் கதைப் புத்தகங்கள் இருந்தன. சிவா தனக்குப் பிடித்த கதைப் புத்தகத்தை எடுத்தான். அவன் ஒரு நாற்காலியில் அமர்ந்து தான் எடுத்து வந்த கதைப் புத்தகத்தைப் படித்து முடித்தான்.

### சொல்வதெழுதுதல் 3 T3W4

அருண் மூன்றாம் வகுப்பில் படிக்கிறான். அன்று புதன்கிழமை. அருண் பள்ளி முடிந்து வீட்டுக்குச் சென்றுகொண்டு இருந்தான். அவன் செல்லும் வழியில் ஒரு பூங்கா இருந்தது.

## **சொல்வதெழுதுதல் 4 T3W5**

அங்கிருந்த இருக்கையில் ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார். அவருக்கு அருகில் நிறையப் பைகள் இருந்தன. அவர் கைத்தொலைபேசியைப் பார்த்துக்கொண்டிருந்தார். திடீரென்று கைத்தொலைபேசி மணி ஒலித்தது.

## **சொல்வதெழுதுதல் 5 T3W6**

அவர் பேசிக்கொண்டே தன் பைகளைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிட்டார். ஆனால், தனது கைப்பையை மறந்து இருக்கையிலேயே வைத்துவிட்டார். அதைப் பார்த்த அருண் அவரை கூவி அழைத்தான்.

## **சொல்வதெழுதுதல் 6 T3W7**

அருண் அழைக்கும் குரல் கேட்டுப் பெண்மணி திரும்பிப் பார்த்தார். அருண் ஓடிப்போய்க் கைப்பையை அவரிடம் கொடுத்தான். அவர் அருணுக்கு நன்றி சொல்லி, அவனைப் பாராட்டினார்.